வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின்(பொ) செயல்முறைகள்
ந.க.எண்: 2210 /ஆ4/ 2024 நாள்.12.05.2025

பொருள் : பள்ளிக் கல்வி– தமிழ்நாடு முதலமைச்சரின் திறமை தேடல் தேர்வு– 2024–2025ஆம் கல்வியாண்டிற்கு தேர்வு நடைபெற்றது. வேலூர் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 7 மாணவர்களுக்கு –பயிற்சி பட்டறை – கோவை மாவட்டத்தில் நடைபெறுதல் –பள்ளிகளுக்கு தெரிவித்தல் –தொடர்பாக

பார்வை :
1) அரசாணை (நிலை) எண் 69.பள்ளிக் கல்வி (அதே)த் துறை நாள் 10.05.2023.
2) அரசாணை நிலை) எண் 235.பள்ளிக் கல்வி (அதேத்துறை நாள் 12.12.2023
3) அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதம் நக எண் – 16183/2025 நாள் 20.06.2024,14.11.2024
4) அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதம் தக எண் 017845183/2023 நான் 14.03.2025
5) தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க. எண் 0040எம்2/இ2/2022 நாள்.112024 மற்றும் 19.03.2025
6) தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், நக எண் 001401 ஏம் 2/82/2022 19.03.2025
7) அரசாணை (நிலை) எண் எண் 235.பள்ளிக் கல்வி (அதே).த்துறை நாள் 30.04.2025
8) தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க. எண் 001401எம்2/இ2/2022 நாள்.09.05.2025

=========

அரசு பள்ளிகளில் மாணவ மாணவியர்களின் கற்றல் அடைவு மற்றும் உள்ளார்ந்த திறன்களை கண்டறிவதற்கும் அவர்களை உயர்கல்வி பயில ஊக்குவிக்கும் வகையிலும், 2023 –2024 ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு முதலமைச்சரின் திறமை தேடல் தேர்வு பார்வை (1) மற்றும் (2)–ல் காணும் அரசாணைகளின்படி நடத்தப்பட்டு வருகிறது. மேலும் 2024–2025ஆம் கல்வியாண்டிற்கு 04.08.2024 அன்று தமிழ்நாடு முதலைமச்சரின் திறமை தேடல் தேர்வு நடைபெற்றது.

மேற்படி தேர்வில் வேலூர் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 2 மாணவர்கள், 5 மாணவிகள் மொத்தம் 7 மாணாக்கர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அம்மாணாக்கர்கள் தற்போது மேல்நிலை முதலாமாண்டு முடித்து மேல்நிலை இரண்டாமாண்டில் சேர உள்ளனர். இம்மாணவர்களுக்கு திறமை தொடர்பான பட்டறை கோவை மாவட்டத்தில் நடத்திட பார்வை 8–ல் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி திறமை தொடர்பான பட்டறை அரசு பள்ளிகளில் தற்போது 11ம் வகுப்பு பயிலும் ஏற்கனவே தெரிவுப் பட்டியலில் உள்ள 7 மாணவர்களை பாதுகாப்பாக அழைத்துச் செல்லவும் ( ஒரு பெண் ஆசிரியர் /பெற்றோர் (தயார்)) பயிற்சி முகாமில் கலந்து கொள்வதற்கு ஏதுவாக சார்ந்த மாணவ / மாணவியர்களின் பெற்றோர்/பாதுகாவலர்களிடமிருந்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒப்புதல் படிவத்தில் பூர்த்தி செய்து இரு பிரதிகளில் பெற்று வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக ஆ4 பிரிவில் சமர்பிக்க சார்ந்த பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், திறமை தொடர்பான பட்டறையில் கலந்துகொள்ளும் மாணவர்களின் அடையாள அட்டை உள்ளிட்டவைகளை தவறாமல் கொண்டு வர வேண்டுமென மாணவ / மாணவியர்களுக்கு அறிவுறுத்திட சார்ந்த பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

<u>குறிப்பு : திறமை தொடர் பட்டறை நடைபெறும் நாள் மற்றும் இடம் பின்னர் சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படும்.</u>

இணைப்பு :

- 2024–2025 04.08.2024 தெரிவு பட்டியல்
- பெற்றோரிடம் பெற வேண்டிய ஒப்புதல் கடிதம்

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ),
வேலூர் .

பெறுநர்:
சார்ந்த மேல்நிலைப்பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் , வேலூர் மாவட்டம்.
நகல்:
அனைத்து அரசு /ஆதிதிராவிட நல உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் , வேலூர் மாவட்டம்.

வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை /தனியார் பள்ளிகள் /தொடக்கக்கல்வி) தகவலின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.